பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**21 01 2026** **6 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அனைத்து துறைகளிலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

2. ஜனநாயக நடைமுறைகள் மற்றும் தேர்தல் மேலாண்மை குறித்த சர்வதேச மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

3. இந்துசமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளுக்கான தொகுதிப் பங்கீடுகள் விரைவில் இறுதி செய்யப்படும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

5. இந்தியா - நியூஸிலாந்து இடையேயான முதலாவது டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டி நாக்பூரில் இன்று நடைபெறவுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

அனைத்து துறைகளிலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தில் உள்ள தாவோசில் நடைபெற்று வரும் உலக பொருளாதார மன்ற மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய அவர், இந்த தொழில்நுட்ப பயன்பாட்டை அதிகரிப்பதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் குறித்து எடுத்துரைத்தார்.

பொதுத்துறை - தனியார் பங்களிப்புடன் இந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளில் அரசு கவனம் செலுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

சாலைக் கட்டுமானப் பணிகளில் எஃகு கசடுகளை பயன்படுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக மத்திய

அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், மலைப் பகுதிகளில் நீண்டகாலம் பயன்படுத்தக்கூடிய வகையில் தரமான சாலைகளை அமைப்பதற்கு இது உதவிடும் என்று தெரிவித்தார்.

எஃகு கசடுகளின் வர்த்தக ரீதியிலான உற்பத்தியை அதிகரிப்பதற்கு தொழில்நுட்ப மேம்பாட்டு வாரியத்திற்கும் தனியார் நிறுவனத்திற்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளதாக அவர் கூறினார்.

குறைந்த செலவில் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் நீண்டகால பயன்பாடு கொண்ட தரமான சாலைகளைக் கட்டமைப்பதற்கு இது உதவிடும் என்று அவர் தெரிவித்தார்.

சாலைகள் சேதமடைவதை தவிர்ப்பதற்கும், சாலைப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும் இதுபோன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

ஜனநாயக நடைமுறைகள் மற்றும் தேர்தல் மேலாண்மை குறித்த சர்வதேச மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ள இந்த மூன்று நாள் மாநாட்டில், 70 நாடுகளை சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

இந்தியாவில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகள், துறை சார்ந்த நிபுணர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்த சர்வதேச மாநாட்டில் பங்கேற்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

உலகளவில், தேர்தல் நடைமுறைகளில் உள்ள சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது தொடர்பாக பரஸ்பரம் தங்களது கருத்துக்களை பகிர்ந்துகொள்ளும் வகையில், பல்வேறு தேர்தல் மேலாண்மை அமைப்புகளுடன் நாற்பதுக்கும் அதிகமான இருதரப்பு ஆலோசனைக் கூட்டங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச தேர்தல் நடைமுறைகள், தேர்தல் தொடர்பான சவால்கள் போன்ற அம்சங்கள் குறித்தும் இம்மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, இந்தியாவில் தேர்தல் நடத்துவதில் உள்ள சவால்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் இந்துசமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் அறங்காவலர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. சேகர் பாபு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், **8** ஆயிரத்து **488** திருக்கோயில்களில் பரம்பரை அடிப்படையில் அல்லாத அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாநிலத்தில் உள்ள **31** ஆயிரத்து **163** திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமனத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதில் **13** ஆயிரத்து **340** விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் காரணமாக ஆயிரத்து **551** திருக்கோயில்களில் அறங்காவலர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

புலிகள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் வன உயிரின பாதுகாப்பு சட்டத்தின்கீழ் அறக்கட்டளைகள் அமைக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. ராஜகண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு புலிகள் பாதுகாப்பு அறக்கட்டளையின் ஆளுமைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினார்.

புலிகளைப் பாதுகாப்பதற்கான கொள்கைகளை வகுத்து செயல்படுத்துவதற்கும், புலிகள் பராமரிப்பில் ஈடுபட்டுள்ளவர்களின் நலன்களை பாதுகாப்பதற்குமான சட்டப்பூர்வ அமைப்பாக இந்த அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து புலிகள் காப்பகங்களிலும், அவற்றின் வாழ்விடப் பாதுகாப்பையும் மேம்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் திரு. ராஜகண்ணப்பன் தெரிவித்தார்.

<<<<>>>>

தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளுக்கான தொகுதிப் பங்கீடுகள் விரைவில் இறுதி செய்யப்படும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் இக்கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெறும் கட்சிகள் குறித்த விவரங்கள், இம்மாதம் 23ஆம் தேதி மதுராந்தகத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற உள்ள பொதுக்கூட்டத்தில் தெரியவரும் என்று கூறினார்.

பிரதமர் பங்கேற்க உள்ள பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் ஆய்வு செய்வதற்கு சென்னை வந்துள்ளதாக திரு. நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<>>>>

தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளில் 9ஆம் வகுப்பு பயின்று வரும் மாணவ-மாணவியருக்கு நடத்தப்பட்ட திறனாய்வு தேர்வு முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற இந்த தேர்வை மொத்தம் ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 145 மாணவர்கள் எழுதினர்.

இந்த தேர்வில் மாணவர்கள் பெற்றுள்ள மதிப்பெண் விவரங்கள் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த திறனாய்வுத் தேர்வில் பங்கேற்ற மாணவர்கள் தங்களது பெயர், பிறந்த தேதி, பாலினம் போன்ற விவரங்களில் ஏதேனும் திருத்தங்கள் இருந்தால் உரிய ஆதாரங்களுடன் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டையும் இணைத்து மின்னஞ்சல் வாயிலாக இம்மாதம் 27ஆம் தேதிக்குள் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<>>>>

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள லூதியானாவில் நாட்டின் முதலாவது நாய்கள் சரணாலயத்தை அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.

இன்று இந்த சரணாலயத்தை தொடங்கிவைத்து பேசிய அம்மாநில அமைச்சர் திரு சஞ்ஜீவ் அரோரா, தெருநாய் கடியிலிருந்து மக்களை பாதுகாக்கும் நோக்கில் இந்த சரணாலயம் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி இந்த நாய்கள் சரணாலயம் செயல்படும் என்றும் திரு சஞ்ஜீவ் அரோரா கூறினார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

உலக நாடுகளின் ஒத்துழைப்புடன் அரிய கனிமங்களின் வினியோக நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

-------------

அமெரிக்காவின் வர்த்தக நடைமுறைகள் ஐரோப்பிய நாடுகளின் இறையாண்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஃபிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோன் தெரிவித்துள்ளார்.

-------------

இந்தியாவுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் முக்கியத்துவம் வாய்ந்தது என்று ஐரோப்பிய தலைவர் திருமதி **Ursula Von Der Leyen** தெரிவித்துள்ளார்.

-------------

அணைகளைப் பாதுகாப்பதில் உள்ள சாவல்களுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய அணைகள் பாதுகாப்புக் குழு தலைவர் திரு. அனுபம் பிரதசாத் தெரிவித்துள்ளார்.

------------

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகள் நடைபெற்று வரும் மாநிலங்களில் மேலும் 22 பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

------------

ராணுவத்தில் தகவல் தொடர்புக்கான கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில் இந்திய மக்கள் தகவல் தொடர்பியல் கல்வி நிறுவனத்துடன் ராணுவம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

------------

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆற்றுத் திருவிழாவில் சிலிண்டர் வெடித்து உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு மாநில அரசின் 3 லட்சம் ரூபாய் நிவாரண தொகையை ஆட்சியர் திரு. தர்ப்பகராஜ் நேற்று வழங்கினார்.

------------

மதுரை மாவட்டத்தில் குடியரசு தின விழாவை ஒட்டி மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த

ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் திரு. பிரவீன்குமார் தலைமையில் நடைபெற்றது.

-------------

நாமக்கல் மாவட்டம் புதுச்சத்திரம் ஊராட்சியில் மாநில மக்கள் தொடர்புத்துறை சார்பில் கட்டப்பட்டு வரும் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் சுப்புராயன் நினைவரங்க கட்டுமானப் பணிகளை ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி ஆய்வு செய்தார்.

-------------

கன்னியாகுமரி - திருவனந்தபுரம் இடையே அமைக்கப்பட்டு வரும் இரட்டை ரயில்பாதை பணிகள் 2 ஆண்டுகளில் நிறைவடையும் என்று தெற்கு ரயில்வே பொதுமேலாளர் திரு. ஆர்.என். சிங் தெரிவித்துள்ளார்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா - நியூஸிலாந்து இடையேயான முதலாவது டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

நாக்பூரில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

------------

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

வதோதராவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 154 ரன் எடுத்தது.

இதையடுத்து களமிறங்கிய தில்லி அணி 19 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 155 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

------------

சந்தோஷ் கோப்பை கால்பந்துப் போட்டி இன்று தொடங்குகிறது.

அசாமில் நடைபெறும் இந்தப் போட்டியில் 12 அணிகள் பங்கேற்கின்றன.

------------

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெறும் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டங்களில் இந்தியாவின் பி.வி. சிந்து, மாளவிகா பன்சோட், தன்வீ ஷர்மா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

--------------

இந்திய சீனியர் மகளிர் கால்பந்து அணியின் பயிற்சியாளராக **Amelia Valverde** நியமிக்கப்பட்டுள்ளார்.

கோஸ்டாரிகாவை சேர்ந்த இவர் ஆஸ்திரேலியாவில் வரும் மார்ச் மாதம் நடைபெற உள்ள மகளிர் ஆசிய கோப்பை கால்பந்து போட்டியில் பங்கேற்கும் இந்திய அணிக்கு பயிற்சி அளிக்கிறார்.

**<<<<The End>>>>**